# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.208/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துக்குமார் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பாண்டி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.03.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.03.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளரும் நானும் , முதல்நிலைக்காவலர் சந்திரசேகர் ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்தபோது சட்டவிரோத மது விற்பனை தொடர்பாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் உதயாட்சி விலக்கு அருகே சென்ற பார்த்தபோது ஒருவர் சாக்குப்பை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். நாங்கள் போய் பார்த்ததும் அவர் ஓட எத்தனித்தார், ஓட எத்தனித்தவரை சார்பு ஆய்வாளர் பிடித்து

விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் ரமேஷ் என்றும் அவர் முகவரியையும் குறிப்பிட்டார். அவர் கையில் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அதில் 7 பாட்டில்கள் express brandy 180 மில்லி அளவுள்ள பாட்டில்கள் இருந்தது. அவரை விசாரித்தபோது அவர் நேற்று இரவு மதுபான கடையில் வாங்கி விற்பனைக்காக வைத்திருந்ததாக சொன்னார். பின்பு அவரிடம் இருந்த மதுபான பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் அவரை காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். அவரிடம் கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை காவல் நிலையம் பின்பு வைத்து அழித்தல் மகஜர் தயார் செய்து மது பாட்டில்களை அழித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி அழித்தல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் சார்பு ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். உதயாட்சி விலக்கு என்ற இடம் தேவகோட்டை நகர் காவல் நிலைய எல்கைக்குட்பட்ட இடம் என்பது தெரியுமா என்றால் இல்லை, தேவகோட்டை தாலுகா காவல் நிலைய எல்கைக்குட்பட்டதுதான். உதயாட்சி விலக்கிற்கு எதிரே உள்ள இடம் தேவகோட்டை நகர் காவல் நிலைய

எல்லை. உதயாட்சி விலக்கிற்கு அருகே கடைகள் இருந்தது எனக்கு தெரியுமா என்றால், அங்கு கடைகளே இல்லை. உதயாட்சி விலக்கிலிருந்து 1 கீலோ மீட்டர் தொலைவிற்குள் மதுபான கடை உள்ளது என்றால் 1கீலோ மீட்டர் இருக்குமா என்று தெரியாது ஆனார் பக்கத்தில் மதுபான கடை உள்ளது. உதயாட்சி விலக்கு என்பது வாகனங்கள் வந்து போய்க்கொண்டு இருக்கும் இடம் என்றால் அதிகமாக வாகனங்கள் வராது அந்த பகுதிக்கு வருபவர்கள் வந்து போவார்கள். எதிரி சாக்குப்பை வைத்திருந்ததை யார் முதலில் பார்த்தோம் என்றால் நாங்கள் 3 பேரும் பார்த்தோம். எதிரி ஓட முயன்றபோது யார் எதிரியை பிடித்தது என்றால் சார்பு ஆய்வாளர் பிடித்தார். சம்பவ தேதிக்கு முந்தைய நாளோ சம்பவ தேதி அன்றோ சம்பவ தேதிக்கு மறுநாளோ அரசு விடுமுறை இல்லை என்றால் ஞாபகமில்லை. இரகசிய தகவல் வந்திருப்பதாக சார்பு ஆய்வாளர் சொன்னார். மதுவிலக்கிற்கு சிவகங்கையில் தனிப்பிரிவு உள்ளது என்றால் ஆமாம். கைப்பற்றுதல் மகஜர், அழித்தல் மகஜர் ஆகியவற்றில் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து வாங்கினார் என்றால் இல்லை, கைப்பற்றுதல் மகஜரில் சம்பவ இடத்திலேயே கையெழுத்து வாங்கினார். எதிரி உதயாட்சி பகுதியை சேர்ந்தவர் என்பது எனக்கு தெரியுமா என்றால், எதிரியை பிடித்ததற்கு பின்பு விசாரிக்கும்போது தெரிந்து கொண்டேன். எதிரி தச்சர் வேலை செய்வது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் என்னுடைய மேல் அதிகாரி புள்ளிவிபரத்திற்காக வழக்கு தாக்கல் செய்ததற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மகஜர்கள் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.